**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 72 **நாள் :** 28.04.2024

சென்னையில் அதிகரித்து வரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள பீமனாம்பேட்டை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தில் வெப்பம் தொடர்பான நோய்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும், குடிநீர் வசதிகள் குறித்தும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.04.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு பணிபுரியும் செவிலியரிடம் பொதுமக்களுக்கு ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகள் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-73க்குட்பட்ட புளியந்தோப்பில் உள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையத்தில் கோடை வெப்பத்தின் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சைக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும், குடிநீர் வசதிகள் மற்றும் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்கப்படுவது குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-74க்குட்பட்ட பெரம்பூர் நெடுஞ்சாலை, மங்களபுரம் பேருந்து நிறுத்தம் மற்றும் வார்டு-71க்குட்பட்ட முரசொலி மாறன் பூங்கா ஆகியவற்றில் மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தல்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பொது இடங்களில் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்கப்படவுள்ள இடங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

**பின்னர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது:**

சென்னையில் அதிகரித்து வரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு இதுகுறித்து விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கோடை வெப்பத்தின் தாக்கத்தினை முன்னிட்டு, மாநகராட்சியின் சார்பில் 188 இடங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை), 140 நகர்ப்புர நலவாழ்வு மையங்கள் (காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை-மாலை 4 மணி முதல் 8 மணி வரை), 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகள் (24 மணி நேரம்) ஆகியவற்றில் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்கப்படுகிறது. மேலும், பொது இடங்களில் சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு ஓ.ஆர்.எஸ். கரைசல் 75 இடங்களில் நாளை (29.04.2024) முதல் வழங்கப்படவுள்ளது. இந்தப் பணிகளை அனைத்து மண்டல அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோடை வெயிலின் தாக்கம் குறித்து கோடை வெயிலில் செய்யக் கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கடைகள் தங்கள்

வாடிக்கையாளர்களுக்கு குடிநீர் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேவையின் அடிப்படையில் கடற்கரை போன்ற கூடுதல் இடங்களுக்கு குடிநீர் வழங்கப்படும்.

கோடை வெயிலினால் அதிக வியர்வை வெளியேறும்போது உடலில் உப்புச்சத்து மற்றும் நீர்ச்சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல் சோர்வு, தலைசுற்றல், தசைப்பிடிப்பு, குறைந்த அளவு சிறுநீர் வெளியேற்றம், மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். பச்சிளம் குழந்தைகள், சிறு வயது குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியவர்கள் அதிகளவில் பாதிப்படைய வாய்ப்புள்ளது.

வெளியில் வேலை செய்யும் போது, அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். தாகம் இல்லை என்றாலும், போதிய அளவு நீர் பருக வேண்டும். சிறுநீரானது வெளிர் மஞ்சள் நிறத்தில் வெளியேறும் அளவில் தேவையான அளவு நீர் பருக வேண்டும். சூடான பானங்கள் பருகுவதைத் தவிர்க்கவும். அதிக அளவில் மோர், உப்பு மற்றும் மோர் கலந்த அரிசிக் கஞ்சி, இளநீர், உப்பு கலந்த எலுமிச்சை பழச்சாறு மற்றும் ஓ.ஆர்.எஸ். உப்புக் கரைசல் ஆகியவற்றை பருக வேண்டும்.

வெளியே செல்லும் போது, திறந்த வெளியில் வேலை செய்யும் போது தலையில் பருத்தி துணி/துண்டு/தொப்பி அணிந்து கொள்ள வேண்டும். குடை பயன்படுத்துவதை கட்டாயமாக்கலாம். பயணத்தின் போது குடிநீர் பாட்டில் எடுத்துச் செல்ல வேண்டும். தேவையில்லாமல் வெயிலில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். வியர்வை எளிதாக வெளியேறும் வகையில் மிருதுவான, தளர்ந்த, காற்றோட்டமான பருத்தி ஆடைகளை அணிவது நல்லது. களைப்பாக இருந்தால் நிழலில் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். பகலில் உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

வீடுகளில் சூரிய ஒளி நேரடியாக படும் ஜன்னல் மற்றும் கதவுகள் ஆகியவற்றை திரைச்சீலைகளால் மூட வேண்டும். இரவு நேரங்களில் குளிர்ந்த காற்று வருமாறு ஜன்னல்களை திறந்து வைத்துக் கொள்ளலாம். குளிர்ந்த நீரால் குளிக்க வேண்டும்.

சூரிய வெப்பம் அதிகமாக உள்ள திறந்த வெளியில் வேலை செய்யும் போது, களைப்பு, தலைவலி, தலைசுற்றல் போன்ற அறிகுறிகள் ஒருவருக்கு ஏற்பட்டால், உடனடியாக வெப்பம் அதிகமுள்ள இடத்திலிருந்து வெப்பம் குறைவான குறிந்த இடத்திற்கு செல்லவும். மேலும், தண்ணீர், எலுமிச்சைப் பழச்சாறு, ஓ.ஆர்எஸ். பருக வேண்டும். மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடிவயிற்றில் வலி ஏற்பட்டால் அருகிலுள்ள நபரை உதவிக்கு அழைக்கவும். மிகவும் சோர்வாகவோ, மயக்கமாகவோ இருந்தால் மருத்துவ உதவியை நாட வேண்டும்.

வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ எவரேனும் மயக்கம் அடைந்தால் உடனடியாக மருத்துவரையோ/ஆம்புலன்சையோ அழைக்கவும். மயக்கமுற்ற நபரை ஒரு பக்கமாக சாய்த்து படுக்க வைக்க வேண்டும். நாடித்துடிப்பு, இதயத்துடிப்பு, சுவாசம் ஆகியவற்றை பரிசோதிக்க வேண்டும். மருத்துவருக்கோ, ஆம்புலன்சுக்கோ காத்திருக்கும் போது பாதிக்கப்பட்ட நபரை சமதரையில் படுக்க வைத்து கால் மற்றும் இடுப்பு ஆகியவற்றை உயர்த்தி பிடிக்க வேண்டும். உடைகளை தளர்த்தி ஐஸ்கட்டியால் ஒத்தடம் கொடுக்க வேண்டும். குளிர்ந்த நீரை உடல் முழுவதும் தொடர்ந்து தெளிக்க வேண்டும். காற்றோட்ட வசதி தொடர்ந்து

கிடைக்க செய்ய வேண்டும். உடல் வெப்ப நிலையை பரிசோதிக்க வேண்டும். வெயில் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆஸ்பிரின் மற்றும் பாராசிட்டமால் மாத்திரைகளை கொடுக்கக் கூடாது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 140 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புற சமூக நல மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகள், தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவை வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்து சிகிச்சை வழங்குவதற்கு ஏதுவாக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கு வெப்பம் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்த மருந்துகளும், 2.96 இலட்சம் ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகளும் கையிருப்பில் உள்ளன. மேலும், இதுகுறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திட களப்பணியாளர்கள் மூலம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டும், ஒளிப்படக் காட்சிகள் மூலமாக விளக்கப்பட்டும் வருகிறது.

எனவே, அதிகரித்து வரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் மூலமாகவும், விழிப்புணர்வில் மாநகராட்சி தெரிவித்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலமாகவும், பொதுமக்கள், திறந்த இடங்களில் பணிபுரிவோர், நீண்ட தூரம் சாலை பயணங்களை மேற்கொள்வோர் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் சாலைகள் மற்றும் தெருக்களில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சுற்றித்திரிந்த மாடுகள் மாநகராட்சிப் பணியாளர்களால் பிடிக்கப்பட்டு பெரம்பூரில் உள்ள கால்நடை பராமரிப்பு இடத்தில் வைத்து பராமரிக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுவலர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**